# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## விலங்குகள் (திருத்தம்)

**1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சர் அவர்களால்
2026 யூலை மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 யூன் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[69 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 14.50** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம், 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவை திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது “விலங்குகள்” என்ற வரைவிலக்கணத்துக்கு ஆடுகள், பன்றிகள் மற்றும் செம்மறியாடுகளை சேர்ப்பதன் மூலம் அவற்றிற்கு பாகம் II இன் ஏற்பாடுகளை ஏற்புடையதாவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

ச.வ.– ஓ 71/2025

## 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடிரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, விலங்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** ஆயிரத்தி தொள்ளாயிரத்து ஐம்பத்தியெட்டாம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவானது, “விலங்கு” என்ற பதத்தின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

““விலங்கு” என்பது, சுத்தமான கால்நடை (எலஹரக்கா) அல்லது எருமையொன்று எனப் பொருள்படுவதுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் -

(அ) II ஆம் பாகத்தில், ஆடு, பன்றி அல்லது செம்மறியாடு; அத்துடன்

(ஆ) IV ஆம் பாகத்தில், செம்மறியாடு, ஆடு, பன்றி அல்லது பண்ணைப்பறவை;”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

PL15853 - 172 (2026/07)